

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உடல்நலக் குறைவால் காலமான தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் சென்னை, மணப்பாக்கம் இல்லத்திற்கு நேற்று (15.12.2024) நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் வனத் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர். தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உடல்நலக் குறைவால் காலமான தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் சென்னை, மணப்பாக்கம் இல்லத்திற்கு நேற்று (15.12.2024) நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி, அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் வனத் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

### கழக அரசின் மீது இட்டுக்கட்டி களங்கம் சுமத்த நினைக்கும்

# அ.தி.மு.க.வின் கட்டுக்கதைகளை மக்கள் நம்பப்போவதில்லை!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி எடப்பாடி பழனிசாமிக்குக் கண்டனம்!

**சென்னை, டிச.16-**

**“கழக அரசின் மீது இட்டுக்கட்டி களங்கம் சுமத்த நினைக்கும் அ.தி.மு.க.வின் கட்டுக்கதை கண்டன அறிக்கைகளை மக்கள் நம்பப்போவதில்லை” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் எடப்பாடி பழனிசாமிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு:-

இன்று (15.12.2024) நடைபெற்ற அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழு வில், முதலமைச்சர் தலைமையிலே நல்லாட்சி வழங்கிவரும் திராவிட மாடல் ஆட்சியின் மீது சில கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி அதன்மூலம் களங்கம் சுமத்திடலாம் எனக் கற்பனைக் கோட்டை கட்டியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

பொதுக்குழுவைக் கூட்டி விட்டோமே தீர்மானத்திற்கு என்ன செய்வது, எங்கே போவது, குறையின்றி நடந்துவரும் தி.மு.க. அரசு மீது எதைச் சொல்லி பழி போடுவது எனத் தெரியாமல் இட்டுக்கட்டிய பொய்களை எழுதி நிரப்பி கண்டனத் தீர்மானம் எனக் கதை கட்டியிருக்கிறார் ‘கட்டுக்கதை’ பழனிசாமி.

**பெரும் சேதம் தவிர்ப்பு!**

இந்திய வானிலை ஆய்வுமையத்தாலேயே கூட சரிவர கணிக்கமுடியாத ஃபெஞ்சல் புயலால் எதிர்பார்க்காத அளவு, எதிர்பார்க்காத இடங்களில் அதி கன மழை பெய்த போதும் முதலமைச்சரின் உத்தரவின் பேரில் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் தமிழ்நாட்டு மக்களுக்கு பெரும் சேதம் ஏற்படாமல் தடுக்கப்பட்டது.

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலமைச்சர் அவர்களால் உடனடியாக நிவாரணம் அறிவிக்கப்பட்டு தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அதோடு மழைக்காலத்திற்கு முன்பாகவே 12.06.2024இல் முதலமைச்சரின் உத்தரவின் பேரில் நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைக்கு உட்பட்ட ஏரி, குளம், கண்மாய்களில் குடிமராமத்துப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு ஏரி, குளம், கண்மாய்கள் தூர்வாரப்பட்டு ஆழப்படுத்தியதன் விளைவாகத்தான் ஃபெஞ்சல் புயல் பெருமழையின் போதும், அதன் பின் அடுத்தடுத்து அதி கனமழை பெய்த போதும் ஏரி, குளங்களில் நீர் தக்க வகையில் தேங்கி மழை நீர் வீணாவது தடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால நிர்வாகத்திறனற்ற அ.தி.மு.க. ஆட்சியில் புயலின் போது பெருத்த உயிர் சேதம், பொருட்சேதம் ஏற்பட்டதை போல தற்போதைய திராவிட மாடல் ஆட்சியிலும் நடக்கும் என எண்ணி ஏமாந்து போன பழனிசாமி தற்போது கண்டன தீர்மானமாவது நிறைவேற்றுவோம் என நிறைவேற்றி இருக்கிறார்.

**பழனிசாமியின் நீலிக்கண்ணீர்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசோடு கூடிக் குலாவி கூட்டணியில் இருந்த காலத்தில் 15ஆவது நிதி ஆணையம் தெரிவித்த வரி உயர்வைக் கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும் என்ற கட்டளையை, சிரம் ஏற்று ‘சரி’ என தலையாட்டி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு தற்போது சொத்துவரி பற்றி நீலிகண்ணீர் வடித்து நடித்துள்ளார் சொத்துவரி உயர்வுக்குக் காரணமான பழனிசாமி.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, சாத்தான்குளம் தந்தை மகன் கொலை, பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமைகள் எனக் கொலை கொள்ளை பாலியல் குற்றங்கள் பசிபிக் கடலளவு பெருகிக் கிடந்த அலங்கோல ஆட்சி நடத்திய பழனிசாமி தற்போது குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி மக்களைக் காத்துவரும் திராவிட மாடல் ஆட்சி மீது சுண்டுவிரலை நீட்டிக்கூட பேச தகுதியில்லை.

ஒன்றிய அரசு கொண்டுவந்து நிறைவேற்றிய, ஒன்றிய அரசு தனித்து ஏலம் விடும் அதிகார சட்டத்திருத்தத்தை வாயாரப் புகழ்ந்து, வானளவு வாழ்த்தி நெடுஞ்சாண் கிடையாக விழுந்து ஆதரித்து, தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை அடமானம் வைத்துவிட்டு தற்போது அது வெளிப்பட்ட உடன், என்ன செய்வதென்று தெரியாமல் தி.மு.க. மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றும் நாடகத்தை நடத்தி உள்ளார்.

**அ.தி.மு.க. ஆட்சியும் டங்கஸ்டன் சுரங்கமும்!**

டங்ஸ்டன் சுரங்கத்துக்கான அனுமதியைக் கொடுக்க காரணமே அடிமை அ.தி.மு.க. ஆட்சிதான். 2019ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் மதுரை மேலூர் பகுதியில் இரவோடு இரவாக நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில்தான் அங்கு டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க ஒன்றிய அரசு முடிவு செய்து ஏலம் விட்டுள்ளது.

இஸ்லாமிய மக்களை இரண்டாந்தர குடி மக்களாக்க முயற்சிக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் (CAA) நிறைவேறக் காரணமாக இருந்த அடிமை அ.தி.மு.க., தற்போதும் கூட இஸ்லாமிய சமூக மக்களை அவதூறாக பேசிய நீதிபதிக்கு ஆதரவாக செயல்பட்டு சிறுபான்மை மக்களுக்கு துரோகம் செய்துவரும் அடிமை அ.தி.மு.க., இன்று இஸ்லாமிய சிறைக்கைதிகள் விடுவிப்பு பற்றி பேசுவது வேடிக்கை.

அதிர்ஷடத்தின் வழியில் ஆட்சியில் அமர்ந்த எடப்பாடி பழனிசாமி மதவாத சக்திகளோடு கைகோர்த்து சிறுபான்மை மக்களின் உரிமையை அடமானம் வைத்துவிட்டு, தனது ஆட்சிக்காலத்தில் சிறையில் வாடும் இஸ்லாமிய மக்களை விடுவிக்க சிறு துரும்பை கூட கிள்ளிபோடாத பழனிசாமி தற்போது யோக்கியன் நாடகம் போட்டால் மக்கள் ஏமாந்து விடுவார்களா என்ன?

**பழனிசாமியின் கபடவேடம்!**

தற்போதும் கூட மறைமுகமாக மதவாத பா.ஜ.க.வோடு கள்ள உறவில் கைகோத்து இருக்கும் பழனிசாமி, ஒன்றிய அரசின் மக்கள் விரோத செயலை கண்டித்து ஒரு வார்த்தை கூட உச்சரிக்கவில்லை; தீர்மானங்களில் கூட பா.ஜ.க.வுக்கு வலிக்காத வகையில் வலியுறுத்தல் தான். ஆனால் சிறப்பாகச் செயல்பட்டுவரும் தமிழ்நாடு அரசுக்குக் கண்டனமாம். இப்படி கபட வேடம் பூண்டிருக்கும் பழனிசாமி என்றுமே சிறு பான்மை மக்களின் அரணாக நிற்கும் திராவிட மாடல் ஆட்சியை குறை கூறினால் மக்கள் நம்பிவிடுவார்களா என்ன?

நிர்வாகத்திறனற்ற பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் நசிவுற்ற அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் திராவிட மாடல் விடியல் ஆட்சியில் மேம்பட்டிருக்கின்றன. உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தியதன் மூலமும், முதலமைச்சரே துபாய், சிங்கப்பூர், ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு நேரடியாகச் சென்று முதலீடுகளைத் திரட்டியதன் விளைவாகவும் தமிழ்நாட்டில் பெரும் நிறுவனங்கள் தொழில் தொடங்கி அதன் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அதன் காரணமாக இந்தியாவிலேயே அதிக வேலையாப்பினை உருவாக்கி வளர்ச்சிப் பாதையில் முன்னணியில் இருக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு உயர்ந்துள்ளது.

**முதலாவது இடத்தில் தமிழ்நாடு!**

அதோடு முதலமைச்சர் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளால் இன்று பெண்கள் வேலைக்கு செல்லும் விகிதத்திலும், சுயசார்பு நிலையிலும் தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே முதலாவதாக உள்ளது.

அடிமை அ.தி.மு.க. ஆட்சியில் இருள் சூழ்ந்து கிடந்த தமிழ்நாடு திராவிட மாடல் நல்லாட்சியில் ஒளி வீசிய படி வளர்ந்துவருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் நலனே முக்கியம் என முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே சிறப்பாக நடந்து வரும் திராவிட மாடல் ஆட்சி மீது அள்ளிவிடும் அ.தி.மு.க.வின் கண்துடைப்பு கண்டனக் கதைகளைத் தமிழ்நாட்டு மக்கள் துளியும் நம்ப போவதல்லை; கட்டுக்கதை பழனிசாமியின் துரோகத்தையும் மறக்கப்போவது இல்லை.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு புகழாரம்!

உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் இதுபற்றி கூறுகையில், இந்தத் திட்டம் கிராமப்புறங்களில் உள்ள பெண் மாணவர்களுக்கு உதவியது. தொலை தூர கிராமங்களைச் சேர்ந்தவர்கள் கூட பயனடைந்தனர், மேலும் ஒற்றைப் பெற்றோர் குடும்பத்தைச் சேர்ந்த பல குழந்தைகளும் இந்தத் திட்டத்தின் மூலம் ஆதரவைப் பெற்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார். மேலும் புதுமை பெண் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மேலும் பல மாணவிகளுக்கு கல்வி கற்பிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெண் குழந்தைகளை மேம்படுத்துவதில் குறிப்பாக கவனம் செலுத்தி, குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பதன் முக்கிய மான முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவர் மேலும் கூறுகையில், இத்திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கியதற்குப் பின்னர், பள்ளிகளில் மாணவிகளின் சேர்க்கை அதிகரித்தது, இடைநிற்றல் விகிதம் குறைந்துள்ளது.

மேலும், பள்ளிக் கல்வித் துறை, தலைமை ஆசிரியர்களுடன் இணைந்து, உயர்கல்வி வாய்ப்புகள் குறித்து மாணவிகளுக்கு தொழில் வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது என்றார்.

**உயர்கல்வியில் மாணவிகள் சேர்க்கை அதிகரிப்பு**

“பள்ளி மாணவிகளுக்கான கல்லூரிகளின் களப் பார்வையை நாங்கள் ஏற்பாடு செய்கிறோம், அங்கு ஆய்வகங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட வசதிகளைக் காட்சிப்படுத்துகிறோம். இந்தச் சந்திப்புகளின் போது, பள்ளிக்குப் பிறகு மாணவிகளின் விருப்பமான படிப்புகளைப் புரிந்துகொள்வதற்காக மாணவிகளுடன் கலந்துரையாடுகிறோம். இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து, உயர்கல்வியில் பெண் மாணவிகளின் சேர்க்கை 34 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

“பண்டங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்து வருவதால், கல்விச் செலவுகளை நிர்வகிப்பது மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால், தற்போது எனது மகளின் படிப்பு கவனிக்கப்படுவதால், எனது குடும்பத்தை ஆதரிப்பதில் கவனம் செலுத்த முடியும்” என்று ஆட்டோ ரிக் ஷா ஓட்டுநர் எஸ்.மணி கூறி

முதல் பக்கத் தொடர்ச்சி

னார். இரண்டாம் ஆண்டு பி.ஏ. திருச்சியில் உள்ள தமிழ் மாணவி அனி விசாலினி, புதுமைப் பெண் திட்ட உதவி ஒரு ஆசீர்வாதமாக வந்ததாகவும், வீட்டுச் செலவுகளுக்கும் உதவுவதாகவும் கூறினார். மேலும் முதுகலை பட்டப்படிப்பைத் தொடர வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

சேலத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு வேதியியல் மாணவி எஸ்.மலர், அந்தப் பணத்தைப் புத்தகங்கள் வாங்க பயன்படுத்தியதாகக் கூறினார்.

மதுரையில் முதலாமாண்டு பி.பி.ஏ. மாணவி எம்.திவ்ய பாரதி மற்றும் இரண்டாமாண்டு பி.எஸ்.சி. மாணவி கே. அனுஷ்யா ஆகியோர் தங்கள் வங்கிக் கணக்கில் டெபாசிட் செய்யப்பட்ட பணம், தங்களின் நிதியை எவ்வாறு நிர்வகிப்பது மற்றும் செலவினங்களை திறமையாக மேற்கொள்வது எப்படி என்பதை கற்றுக் கொடுத்ததாக பகிர்ந்து கொண்டனர்.

புதுமை பெண் திட்டமானது பெண் மாணவர்களை மேம்படுத்துவதற்கும், வங்கிக் கணக்குகளைத் தொடங்குவதற்கும், வங்கிச் சூழல் பற்றிய அறிவைப் பெறுவதற்கும் உதவும். பல மாணவர்கள் புதிய கணக்குகளை திறப்பதன் மூலம் வங்கிகளும் பயனடைந்துள்ளன. புதுமை பெண் திட்டத்தில் 74,700 பயனாளிகள் தங்களிடம் கணக்கு வைத்திருப்பதாக இந்தியன் வங்கி தெரிவித்துள்ளது. கூடுதலாக, பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 50,000 அட்டைகள் வழங்கப்பட்டன, இது அவர்களின் நிதிச் சேவைகளுக்கான அணுகும் முறையை மேலும் மேம்படுத்துகிறது.

காங்கயத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் நசீம் ஜான் கூறுகையில், இத்திட்டம் படிப்பை பாதியில் நிறுத்தியவர்களை மீண்டும் கல்லூரியில் சேரத் தூண்டியது. தர்மமூர்த்தி ராவ் பகதூர் கலவாலா கண்ணன் செட்டி இந்துக் கல்லூரியின் முதல்வர் ஜி. கல்விக்கரசி கூறுகையில், “அதிகமான எண்ணிக்கையிலான மாணவிகள் தங்களுக்கு விருப்பமான சான்றிதழ் படிப்புகளில் சேருகின்றனர். கூடுதல் நிதி கிடைக்கும் தன்மை மூலம் பல்வேறு விருப்பங்களை ஆராய அனுமதிக்கிறது என்றார்.

இவ்வாறு ‘தி இந்து’ ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள சிறப்புக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திண்டுக்கல் மாவட்டம், புஷ்பத்தூர் ஊராட்சி, சாமிநாதபுரம் – அமராவதி ஆற்றுப்படுக்கை பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட 60 குடும்பங்களை சார்ந்த சுமார் 150 நபர்களுக்கு நிவாரணப் பொருட்களை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் பூங்கொடி, பழனி சார் ஆட்சியர் கிஷன்குமார், வட்டாட்சியர் பிரசன்னா, துணை இயக்குநர் (பழனி) மரு.அனிதா, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி சத்தியபுவனா , துணைப் பெருந்தலைவர் தங்கம், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபுபாண்டி, ஒன்றியச் செயலாளர் சுப்பிரமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மண்டல கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆய்வுக்கூட்டம் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தே.மதியழகன் எம் எல் ஏ தலைமை தாங்கினார்.மாவட்ட பொறுப்பு அமைச்சர் அர.சக்கரபாணி ஆலோசனைகளை வழங்கினார் .கழகத் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டிஆர்பி ராஜா சிறப்புரை ஆற்றினார். மாவட்ட கழகச் செயலாளர்கள் ஒய் .பிரகாஷ் எம் எல் ஏ, ஏ. பி. நந்தகுமார் எம் எல் ஏ, தேவராஜன் எம் எல் ஏ, மற்றும் நல்லதம்பி எம் எல் ஏ,வில்வநாதன் எம் எல் ஏ, அமுலு விஜயன் எம் எல் ஏ, மேயர் எஸ் ஏ சத்யா, சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் வினோத் காந்தி உள்ளிட்டோர் பங்கேற்று உரையாற்றினர். விழா ஏற்பாடுகளை தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் எஸ் டி இசை சிறப்பாக செய்திருந்தார். அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், துணை ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.